### பல ஆயிரம் குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றப் போவதில் மகிழ்ச்சி:

# ‘வெற்றி நிச்சயம்’ என்பது திட்டத்தின் பெயர் மட்டுமல்ல, பயிற்சி பெறும் ஒவ்வொரு இளைஞருக்கும் வெற்றி நிச்சயம் என்பதே அரசின், ஒரே இலக்கு!

## சென்னையில் நடைபெற்ற ‘வெற்றி நிச்சயம்’ தொடக்க விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உற்சாக உரை!

**சென்னை, ஜூலை 3-**

**முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான `நான் முதல்வன்’ திட்டத்தின் அடுத்தகட்ட பாய்ச்சலாக ‘வெற்றி நிச்சயம்’ எனும் முக்கியமான முன்னெடுப்பை முதலமைச்சர் அவர்கள், சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வரவேற்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``முதற்கட்டமாக ஆண்டுக்கு 75 ஆயிரம் இளைஞர்களுக்கு அரசு செலவில், தொழில் நிறுவனங்கள் - திறன் பயிற்சி நிறுவனங்கள் மூலம் திறன் பயிற்சி வழங்குவதற்காக தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் பல ஆயிரம் குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றப் போவதில் மகிழ்ச்சி அடைகிறோம்” என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரையின் விவரம் வருமாறு:-



### ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூன்றாம் ஆண்டு வெற்றி விழா

‘நான் முதல்வன்’ திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தன் கனவுத் திட்டம் என்று சொல்லி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி வைத்தார்கள். அதாவது, தமிழ்நாட்டு இளைஞர்கள் திறன் பயிற்சியோடு உயர்கல்வி பயில வேண்டும். 100 சதவிகித அளவிற்கு வேலைவாய்ப்பைப் பெற வேண்டும் என்பதுதான் அவரின் கனவு. அந்தக் கனவை `நான் முதல்வன் திட்டம்’ இன்று நனவாக்கி, உண்மையாக்கிக் கொண்டு இருக்கிறது.

### வேலைவாய்ப்பு

ஏனென்றால், இதுவரைக்கும் 41 லட்சம் திறன் சான்றிதழ்களை நான் முதல்வன் திட்டத்தின் மூலம் நாங்கள் வழங்கி இருக்கிறோம். 3 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்களுக்கு நான் முதல்வன் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் வேலை வாய்ப்பையும் நான் முதல்வன் திட்டம் வழங்கி இருக்கிறது.

‘ஸ்கவுட்’ திட்டத்தில் பல மாணவர்கள் இங்கிலாந்து, ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள நிறுவனங்களில் திறன் பயிற்சிகளைப் பெறுகிறார்கள். அங்கேயே பல வேலை வாய்ப்பையும் பெற்று இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஒன்றிய அரசு பணிகளுக்கான தேர்வுகளுக்கும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகையுடன் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசு பணிக்குத் தேர்வாகும் இளைஞர்களின் எண்ணிக்கையை 2021-ஆம் ஆண்டு நம் அரசு அமைவதற்கு முன்பு, அரசு அமைந்ததற்கு பின்பு என்று சொல்லும் அளவிற்கு அதிக எண்ணிக்கையில் நம் மாணவர்கள் யு.பி.எஸ்.சி தேர்வில் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வெற்றி பெற்று வருகிறார்கள்.

பள்ளி மாணவர்களுக்கு ‘நான் முதல்வன்’, ‘ஒலிம்பியாட்’, ‘உயர்வுக்குப் படி’, ‘கல்லூரிக் கனவு’ போன்ற திட்டங்களையும் நம் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் செயல்படுத்தி வருகிறோம். இதன் மூலம் மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

### வெற்றி நிச்சயம்

ஏழ்மை போன்ற காரணங்களால், பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரி சேர முடியாமல் இருக்கும் மாணவர்களைக் கண்டறிந்து, உயர்கல்வி சேர கலந்தாய்வு மற்றும் உதவிகளையும் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் செயல்படுத்துகிறோம். நான் முதல்வன் திட்டத்தின் வெற்றியின் தொடர்ச்சியாகத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் இன்று `வெற்றி நிச்சயம்’ என்ற திட்டத்தையும் தொடங்கி வைக்கிறார்கள். ‘வெற்றி நிச்சயம்’ என்பது இந்தத் திட்டத்தின் பெயர் மட்டுமல்ல, இதன் கீழ் பயிற்சி பெறுகிற ஒவ்வொரு இளைஞருக்கும் வெற்றி நிச்சயம் என்பதே இந்த அரசின், முதலமைச்சரின் ஒரே இலக்கு.

‘மைக்ரோ லெவல் வரைதிறன்’ பயிற்சியை எப்படிக் கொண்டு சேர்ப்பது என்பதை யோசித்து அதனடிப்படையில், இந்தத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். இந்த பிரத்யேக திறன் பயிற்சி 38 தொழில் பிரிவுகளில் 165 பயிற்சிகளை 500-க்கும் மேற்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட உள்ளது. அது மட்டுமல்ல, திறன் பயிற்சி பெறுவதற்கான கட்டணத்தையும் நம் அரசே செலுத்த உள்ளது.

### 100 கோடி ரூபாய் நிதி

வெற்றி நிச்சயம் திட்டத்தின் முதற்கட்டமாக ஆண்டுக்கு 75 ஆயிரம் மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக நம் முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள். அதற்கு தமிழ்நாட்டு இளைஞர்கள் சார்பாக முதலமைச்சர் அவர்களுக்கு எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகள், ஏழை, எளிய மாணவர்கள் போன்றோருக்கு முன்னுரிமை அடிப்படையில் திறன் பயிற்சியும் வழங்கப்பட இருக்கிறது. அவர்களுக்கான ஊக்கத் தொகையும் நம் அரசு சார்பாக வழங்க உள்ளோம். ஆகவே, இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த இளைஞர் சமுதாயத்தையும், வெற்றிபெற்ற சமுதாயமாக ஆக்கப்போகிறது என்பதில் எங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை. எங்களுக்கு அது மகிழ்ச்சி.

இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெறவுள்ள இளைஞர்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய சிறப்புக்குரிய திட்டத்தின் தொடக்க விழாவிற்கு வருகை தந்து, எங்களை எல்லாம் ஊக்குவித்துள்ள முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, மீண்டும் ஒருமுறை வரவேற்று மகிழ்கிறேன். ‘வெற்றி நிச்சயம்’ முன்னெடுப்பு தமிழ்நாட்டு இளைஞர்களின் வெற்றிக்கு நிச்சயம் துணை நிற்கும்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., உயர் கல்வித் துறையின் செயலாளர் சங்கர் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் கிராந்தி குமார் ஐ.ஏ.எஸ்., கான்ஃபெடரேசன் ஆஃப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ் தமிழ்நாடு யூனியன் சேர்மேன் உன்னி கிருஷ்ணன், நான் முதல்வன் திட்டத்தின் தலைமைச் செயலதிகாரி எம்.ஜெயப்பிரகாசன் மற்றும் ராஜ்குமார், சாந்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

---

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், ஓரணியில் தமிழ்நாடு!

# தமிழனின் திராவிட நாகரிகத்தை ஒன்றிய அரசு மறைக்கப் பார்க்கிறது!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஜூலை 3-

தமிழ்நாட்டில் மண் காக்க, மானம் காக்க மொழி காக்க அரசியல் பயணம் தொடங்கியுள்ளதாகவும், தமிழ்நாட்டில் மண்ணைக் காக்க வேண்டிய நிலைப்பாடு தற்பொழுது உள்ளதாகவும், தமிழக முதல்வரும், தி.மு.கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று திருவண்ணாமலை மாவட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” என்ற பயணம் இன்று முதல் தொடங்குகிறது என்றார்.




நீண்ட நெடு ஆண்டுகளாக திராவிட நாகரிகத்திற்கும், வேத நாகரிகத்திற்கும் பெரிய போராட்டம் நடைபெற்று வருவதாகவும் இந்தியாவில் நம் முன்னோர்கள் காலத்தில் இருந்தே திராவிட நாகரிகம் முந்தைய நாகரிகம் என நாம் கூறி வருவதாக சுட்டிக்காட்டிய அவர் ஆனால் வட இந்தியாவில் வேத நாகரிகம் முந்தையது என அவர்கள் தெரிவித்து வருவதாகவும் கூறினார்.

தமிழ்நாட்டில் தொல்லியல் துறை சார்பில் கீழடியில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் , அங்கிருந்து கிடைக்கப்பட்ட இரும்பு தாதுவை பல்வேறு ஆய்வகங்களுக்கு அனுப்பிய நிலையில் தமிழன் 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை பயன்படுத்தி உள்ளான் என்பதற்கு சான்று கிடைத்துள்ளதாகவும் கூறினார்.

தமிழனுடைய வரலாறு 5300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உள்ளது என்பதை ஒன்றிய அரசு அங்கீகரிக்காமல் சான்று போதவில்லை என தட்டிக் கழித்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டிய அவர் தமிழ் மண்ணை காப்பாற்ற அனைவருக்கும் பொறுப்பு உள்ளது என்றார்.

தொடர்ந்து பேசியவர் 18ஆம் நூற்றாண்டில் இருந்து மொழிக்காக போராட்டங்கள் நடைபெற்றதாகவும், குறிப்பாக 20ஆம் நூற்றாண்டில் கி.ஆ.பெ.சுவாமிநாதன், திருவிக, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் உள்ளிட்ட பெரும் தலைவர்களால் மொழியை காக்க பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டதாகவும் பட்டிய விட்டு பேசியவர் உலக வரலாற்றிலேயே மொழிக்காக தன்னையே மாய்த்துக் கொண்ட வரலாறும் தமிழ்நாட்டில் தான் உள்ளது என்று பெருமிதமாக கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் புதிய கல்விக் கொள்கைக்கு தமிழக கல்விக் கொள்கைக்கு ஏதேனும் சம்பந்தம் உள்ளதா என கேள்வி எழுப்பிய அவர் தமிழ்நாட்டின் கல்விக் கொள்கையை பயின்று தான் அப்துல் கலாம், மயில்சாமி, அண்ணாதுரை உள்ளிட்ட பெரிய பெரிய விஞ்ஞானிகள் தமிழகத்தில் உருவானார்கள் என்றும் விளக்கி பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர் ஒன்றிய அரசு மூன்றாவது மொழியாக இந்தியை திணிக்க முயற்சித்து வருவதாகவும் இதற்காக பல ஆண்டுகளாக போராட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டி பேசியவர், தற்பொழுது ஒன்றிய அரசு தமிழைவிட சமஸ்கிருதத்தை வளர்க்க ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை செலவு செய்து வருவதாகவும் மருத்துவத்திற்கும் சமஸ்கிருதத்திற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்..

தாய்மொழி தமிழுக்காக 4000 ஆண்டு வரலாறு உள்ளதாகவும் ஆனால், இந்தி மொழிக்கு 500 ஆண்டு வரலாறு உள்ளது என சுட்டிக் காட்டி பேசிய அவர் தமிழ் நாட்டிற்கு வரும் ஒன்றிய அமைச்சர்கள் உள்ளிட்ட பலரும் தமிழ்நாட்டு மக்களை கவர்வதற்காக வணக்கம் நன்றி என்ற வார்த்தைகளை இந்தியில் எழுதி வைத்துக் கொண்டு மேடையில் பேசுவதாக விமர்சித்தார்.

தமிழ் மொழி 4000 ஆண்டு பழமையான மொழி, செம்மொழி என பேசும் பிரதமர் உள்ளிட்ட பலரும் அரசு அலுவல் மொழியாக ஏன் அங்கீகரிக்கவில்லை எனவும் கேள்வி எழுப்பினார்.

தமிழ் பண்பாட்டிற்கும், வட இந்திய பண்பாட்டிற்கும் பல்வேறு வித்தி யாசங்கள் உள்ளதாக சுட்டிக் காட்டி பேசிய அவர், இந்திய பொருளாதாரம் உயர குடும்ப கட்டுப்பாடு அவசியம் என ஒன்றிய அரசு கூறியதின் அடிப்படையில் தமிழ்நாட்டில் மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் பல்வேறு நிலைகளில் மக்களிடம் எடுத்துக் கூறி ஒன்றிய அரசின் திட்டத்தை நிறைவேற்றியதை குறிப்பிட்டு பேசியவர் அதன் அடிப்படையில் பலரும் குடும்பக்கட்டுப்பாடு செய்து தற்பொழுது இந்தியாவில் 9.69% பொருளாதார வளர்ச்சி பெற்றது தமிழ்நாடு தான் வெற்றி முதலிடத்தில் உள்ளதாகவும் கூறினார்.

ஒன்றிய அரசு கூறியதின் அடிப்படையில் தமிழ்நாடு செய்ததற்கு தற்பொழுது தண்டனையாக ஒன்றிய அரசு தொகுதி வரையறை செய்ய உள்ளதை சுட்டிக்காட்டி பேசினார்.

தமிழ்நாட்டில் தற்பொழுது மொழி மானம் மண் உள்ளிட்டவைகளை காக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

எடப்பாடி பழனிச்சாமி சுற்றுப்பயணம் குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர்,

வடவர் படையெடுப்பு என்ற பெயரில் வடபகுதியை ஆளும் பா.ஜ.க .அரசு, திராவிட இயக்கம் நிரம்பி உள்ள தமிழ்நாட்டில் எப்படியாவது கால் ஊன்ற பொருத்தமானது அ.தி.மு.க. என்று கருதி அவர்களுடன் கூட்டணி அமைத்து வெற்றி பெற உள்ளதாக தமிழ்நாட்டின் உள்ளே வர முயற்சிப்பதாகவும் அதற்கு எடப்பாடி பழனிச்சாமி இறை யாகி விட்டது தங்களுக்கு வருத்தம் அளிப்பதாகவும்,

வர இருக்கின்ற வட வெள்ளத்தில் எடப்பாடி பழனிச்சாமி சிக்கிக் கொண்ட வருத்தம் அவர் உணரும் காரணத்தினால் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்காகவே இதுபோன்ற சுற்றுப்பயணத்தை அவர் மேற்கொள்கிறார் என்றும் விமர்சித்த அவர் எடப்பாடி பழனிச்சாமியின் சுற்றுப்பயணத்தால் தமிழ்நாட்டிற்கோ தமிழக மக்களுக்கும் எந்த பயனும் கிடையாது என்று கூறினார்.

தமிழ்நாட்டில் மின்சார உயர்வு குறித்து அன்புமணி பேசியிருந்தது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்தவர்,

அன்புமணி ராமதாஸ் ஏதோ ஒரு பிரச்சனையை மறைப்பதற்காக பொது விஷயத்தை பேசுவதாக ஏதேதோ பேசி வருவதாகவும், அபாண்டமாக பொய் பேசுவது அன்புமணி ராமதாஸின் வாடிக்கை என்றும் அவர் விமர்சித்தார்.

திருவண்ணாமலை திண்டிவனம் ரயில் பாதை அமைக்க நிலம் எடுக்க தமிழக அரசு தடையாக இருப்பதாக பாஜக அஸ்வத்தாமன் கூறியதற்கு பதில் அளித்த அமைச்சர் எ.வ.வேலு நிலம் எடுக்கும் விவசாயிகளுக்கு ஒன்றிய அரசின் சார்பில் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களுக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது என கேள்வி எழுப்பிய அவர் தமிழ்நாட்டில் தன்னை அடையாளப் படுத்திக் கொள்ள எவ்வாறு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் செய்கிறார்களோ அதே போல் வட இந்தியாவில் தன்னை அடையாளப் படுத்திக் கொள்ள அவர் முயற்சி மேற்கொள்கிறார் என்றும் விமர்சித்தார்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாவட்ட அணி அமைப்பாளர் டி.வி.எம்.நேரு, இரா.கார்த்திகேயன், ப.கார்த்திவேல்மாறன், துரை.வெங்கட் ஆகியோர் உடன் இருந்தனர்.

---

### தமிழ்நாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# தி.மு.க. கூட்டணி மட்டுமே வலுவாக இருக்கிறது!

## திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

திருச்சி, ஜூலை 3 -

தமிழ்நாட்டில் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. கூட்டணி மட்டுமே வலுவாக உள்ளது என்று திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டியளித்தார்.



இது குறித்து நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும் தி.மு.க.வின் முதன்மை செயலாளருமான கே என் நேரு திருச்சியில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அது வருமாறு:

ஓரணியில் தமிழ்நாடு என்கிற உறுப்பினர் சேர்க்கையை முதல்வர் இன்று துவக்கி வைத்துள்ளார் இது தொடர்பாக நாளை பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது நாளை மறு நாள் முதல் உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்படுகிறது.

30 சதவீதம் உறுப்பினர்கள் சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது திமுகவில் ஒரு கோடி உறுப்பினர்கள் உள்ளனர் உறுப்பினர் சேர்க்கை மூலமாக அந்த எண்ணிக்கை 2 கோடிக்கும் அதிகமாகும்.

இந்த உறுப்பினர் சேர்க்கையின் மூலமாக வீடு வீடாக சென்று நாங்கள் மக்களை சந்திக்க உள்ளோம் தி.மு.க. அரசு செய்த சாதனைகள் ஒன்றிய அரசு எந்தெந்த வகையில் தமிழ்நாட்டை வஞ்சித்துள்ளது என்பது குறித்து சொல்வோம்.

யாரையும் வற்புறுத்தி கட்சியில் உறுப்பினராக இணைக்க மாட்டோம் விருப்பப்பட்டவர்களை மட்டுமே இணைத்துக் கொள்வோம் அதே நேரத்தில் உங்களிடம் ஒன்றிய அரசு தமிழகத்தை எப்படி வஞ்சிக்கிறது என்பது குறித்து அனைவரிடமும் எடுத்துக் கூறுவோம்.

தமிழ்நாடு இருமொழிக் கொள்கையை தான் பின்பற்றி வருகிறது அப்படி இருந்தும் ஒன்றிய அரசு இந்தியை திணிக்க முயற்சித்து வருகிறது அதை நாம் முறியடித்து வருகிறோம்.

பா.ஜ.க. ஆளும் மகாராஷ்டிராத்திலும் ஹிந்தி திணிப்புக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்து உள்ளார்கள்.

திருபுவனம் காவல் நிலைய இளைஞர் மரணம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என எடப்பாடி பழனிச்சாமி கூறுகிறார் ஆனால் அவர் முதல்வராக இருந்த போது தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தை டி.வி பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என கூறினார். இளைஞர் மரண விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. சம்பந்தப் பட்ட காவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் வேறுயாரும் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணியில் பிளவை ஏற்படும் என எதிர்க்கட்சியினர் பேசி வருகிறார்கள். ஆனால் தி.மு.க. கூட்டணி மட்டும் தான் உறுதியாக உள்ளது.

தி.மு.க.விற்கு யார் விருப்பப்பட்டு வந்தாலும் அவர்களை சேர்த்து கொள்வோம்.

தி.மு.க.வில் உட்கட்சி பிரச்சினை அண்ணன் தம்பி பிரச்சினை தான் அதை பேசி தீர்த்து கொள்வோம்.

மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்படுமானால் நிச்சயம் நீட் தேர்வு ரத்து செய்யப்படும்.

இனிமேல் டாஸ்மாக் கடை திறக்கப்படாது என தமிழக அரசு சார்பில் நீதி மன்றத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஓரணியில் தமிழ்நாடு மூலம் எங்களின் செயல்படும் வேகத்தை கூட்டும். தேர்தலுக்கு பத்து மாதங்களுக்கு முன்பாகவே மக்களை சந்திக்க செல்கிறோம். தற்போது தொடங்குவதால் 50 சதவீத தேர்தல் பணி முன்பே முடிவடையும்.

மக்களிடம் நாங்கள் செய்த திட்டங்கள் 10 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்த அதிமுக வினர் செய்யாதது உள்ளிட்டவற்றை எடுத்து கூறுவோம்.

பேருந்து நிலையமே கட்டாமல் இருந்த அ.தி.மு.க., பஞ்சப்பூர் பேருந்து நிலையம் திறக்கப்படவில்லை என போராட்டம் செய்ய உள்ளார்கள்.

திருச்சி மாவட்டத்திற்கு சித்தா மருத்துவமனை, பல் மருத்துவமனை, மாநகராட்சி பள்ளிகளுக்கு புது கட்டிடம், நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை திருச்சிக்கு கேட்டுள்ளோம்.

எந்த தொகுதியில் யார் போட்டியிடுவது குறித்து முதல்வர் முடிவெடுப்பார்.

கூட்டணிக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்குவது என்பது குறித்து திமுக தலைவரும் கூட்டணி கட்சி தலைவரும் இணைந்து முடிவெடு ப்பார்கள்.

தி.மு.க. கூட்டணியில் மேலும் சில கட்சிகளை இணைக்கும் எண்ணம் தற்போது இல்லை அதே நேரத்தில் கூட்டணிக்கு வந்தால் வரவேற்போம் என முதல்வர் கூறியுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேட்டியளித்தார்.